செ.வெ.எண்:02 நாள்:01.11.2021

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வெளியிட்டார்.**

**18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும் தங்களது பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (01.11.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்-2022 பணி மேற்கொள்ளும் பொருட்டு வரைவு வாக்காளர் பட்டியல் (01.11.2021) இன்று கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

**வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்கள் விபரம் பின்வருமாறு:**

| வ. எண். | தொகுதியின் பெயர் | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 51 ஊத்தங்கரை (தனி) | 119643 | 118811 | 56 | 238510 |
| 2 | 52 பர்கூர் | 121860 | 124863 | 16 | 246739 |
| 3 | 53 கிருஷ்ணகிரி | 130231 | 135453 | 39 | 265723 |
| 4 | 54 வேப்பனஹள்ளி | 127864 | 123426 | 33 | 251323 |
| 5 | 55 ஒசூர் | 180498 | 173404 | 104 | 354006 |
| 6 | 56 தளி | 128685 | 122263 | 32 | 250980 |
| மொத்தம் | | 808781 | 798220 | 280 | 1607281 |

கடந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலின் போது வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலுக்கு பின்னர் தொடர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்த்தல் மற்றும் இறந்த மற்றும் வெளியூர் சென்ற நபர்களை நீக்கம் செய்ததன் அடிப்படையில் புதியதாக 2001 நபர்கள் நாளது வரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தற்போது நடைபெற உள்ள சிறப்பு சுருக்கமுறைத்திருத்தத்தின் படி 01.01.2022 அன்று 18 வயது பூர்த்தியடையும் அனைத்து இளம் வாக்காளர்களும் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்த்திட தகுதியுடையவராகின்றனர். இதன் பொருட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படும் அனைத்து கல்லூரிகளிலும் வளாக தூதர்கள் (Campus Ambassadors) மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இளம் வாக்காளர்களை அடையாளம் கண்டு வாக்காளர் பட்டியலில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திடாத நபர்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள 01.11.2021 முதல் 30.11.2021 வரை மனு செய்து சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் மேற்கொள்ளலாம். மேலும், **13.11.2021 (சனிக்கிழமை), 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை), 27.11.2021 (சனிக்கிழமை) மற்றும் 28.11.2021 (ஞாயிற்றுக்கிழமை)** ஆகிய நான்கு சிறப்பு முகாம் நாட்களில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடைபெறும் சிறப்பு முகாமில் நேரடியாக விண்ணப்பங்களை பெற்று அன்றே பூர்த்தி செய்து வழங்கலாம். வாக்காளர்களுக்கு உதவி புரிவதற்கு ஏதுவாக அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் விடுமுறை அல்லா நாட்களில் காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

மேலும், வாக்காளர்கள் தங்களது வீட்டிலிருந்தே விண்ணப்பிக்க ஏதுவாக https://www.nvsp.in என்ற இணையதள முகவரி வாயிலாகவும், கைபேசிகளில் Voters Helpline App செயலியினை பதிவிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம். இதன் மூலம் வாக்காளர்கள் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்திடவும், திருத்தங்களை மேற்கொள்ளவும் அலுவலகங்களுக்கு வரவேண்டிய தேவையில்லை. இது தொடர்பாக ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் வாக்காளர்கள் 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அழைத்து உரிய விளக்கங்கள் பெறலாம்.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் இந்த சிறப்பு முகாம்களை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்த்து ஜனநாயக கடமையை ஆற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.சதீஸ்குமார் (கிருஷ்ணகிரி), திருமதி.வ.தேன்மொழி (ஓசூர்), வட்டாட்சியர் (தேர்தல்) திரு.ஜி.ஜெயசங்கர் மற்றும் அனைத்து கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**